# OS NO. 68/2019 நாள் 06.12.2021

**சாட்சி வா.சா. 1 முருகேசன் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னுடைய சொந்த ஊர் ஒரத்தநாடு தாலுக்காவில் உள்ளது. பிரதிவாதிகள் தஞ்சாவூர் தாலுக்காவை சேர்ந்தவர்கள், என்னுடைய ஊருக்கும், பிரதிவாதிகள் ஊருக்கும் 15 கி.மீ தூரம், கோவிந்தராஜ் எனக்கு விபரம் தெரிந்ததில் இருந்து எங்கள் ஊருக்கு வரப்போக இருப்பதில் எனக்கு பழக்கமானவர், அவ்வாறு அவர் எனக்கு 7, 8 வருடங்கள் பழக்கமானவர். நாங்கள் முத்துராஜா அம்பலக்காரர் வகுப்பை சேர்ந்தவர்கள், பிரதிவாதிகள் பட்டியல் வகுப்பினர். கோவிந்தராஜ் எங்கள் ஊரில் எங்கள் வீட்டிற்கே வருவார். தாவா கடனுக்கு முன்பே பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கியிருக்கிறார், அதை திருப்பி செலுத்தியும் இருக்கிறார், அவர் பணம் கொடுத்ததும் Record ஐ திருப்பி கொடுத்துவிடுவேன், அதனால் என்னிடம் Record எதுவும் இல்லை. நான் பிரதிவாதியின் வீட்டிற்கு ஒருமுறை போயிருக்கிறேன், தாவா கடன் கொடுத்த பின்னர் ஒருமுறை போயிருக்கிறேன், அதற்கு முன்னர் போனதில்லை, பிரதிவாதிகளின் வீட்டு விஷேத்திற்கு அவர்கள் அழைத்ததில்லை நானும் போனதில்லை. பிரதிவாதிக்கு இரண்டு மகள்கள், ஒருமகன். அவர்களது பெயர் என்ன என்று தெரியாது, அவர்கள் என்ன படித்திருக்கிறார்கள் என்பதும் தெரியாது, பிரதிவாதியின் பிள்ளைகள் என்ன வேலை செய்கிறார்கள் என்பதும் தெரியாது, பிரதிவாதியின் உடன்பிறந்தவர்கள் மற்றும் அவரது அம்மா பற்றியும் தெரியாது. பிரதிவாதிக்கு பூர்விகமாக ஒரு ஏக்கர் , கிரயம் வாங்கிய நிலம் ஒரு ஏக்கர் என இரண்டு ஏக்கர் சொந்தமாக உள்ளது. என்னிடம் பணம் வாங்குவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு கிரயம் வாங்கியதாக சொன்னார், எப்போது கிரயம் வாங்கினார் என்று எனக்கு சரியாக தெரியாது, யாரிடம் இருந்து எவ்வளவு தொகைக்கு கிரயம் வாங்கினார் என்று அவர் என்னிடம் சொல்லவில்லை. பிரதிவாதி கிரயம் வாங்குவதற்கு முன்பு கூலி வேலை செய்து வந்தார் என்றால் தெரியும். பிரதிவாதியின் வீடு என்னவகையானது எந்த பக்கம் பார்த்திருக்கிறது என்று எனக்கு தெரியாது. ஒரே ஒருமுறை போனேன், அதுவும் ரோட்டில் நின்று பேசிவிட்டு வந்தேன். பிரதிவாதிகளுக்கு வருமானம் என்ன, வரவுசெலவு என்ன எனக்கு தெரியாது. தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்யும் மனுவின் சொல்லியுள்ள சொத்தை பற்றிய விபரத்தை பதிவு அலுவலகத்தில் நகல் வாங்கி பார்த்து தெரிந்துகொண்டேன். நான் கடன் கொடுக்கும்பொழுது பிரதிவாதிகளின் சொத்து பத்திரத்தை அடையாள அட்டையையோ வாங்கவில்லை. பிரதிவாதிகளுக்கு வேறு சொத்து இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. எனக்கு ஆதார்அட்டை வீரமுண்டார்குடி காட்டில் உள்ளது, அந்த விலாசத்தில் குடும்பஅட்டை, வாக்காளர் அடையாளஅட்டை உள்ளது, என் மனைவி, குழந்தைகளுக்கும் அதே விலாசத்தில்தான் உள்ளது. எனக்கு 60 ஏக்கர் நிலம் உள்ளது, எனக்கு பட்டா எண் ஞாபகமில்லை, என் பெயரில் உள்ள சொத்திற்கு பட்டா எண்ணா, புல எண்ணா என்று ஞாபகமில்லை, 145 என்று மட்டும் ஞாபகமிருக்கிறது, என் பெயரில் 5 ¾ ஏக்கர் நிலம் இருக்கிறது, என் மனைவி பெயரில் 4 ¾ ஏக்கர், அதற்கும் பட்டா எண், புல எண் , ஞாபகமில்லை, என் மகன் தமிழ்செல்வன் பெயரில் 7 ¾ ஏக்கர் இருக்கிறது, அதற்கும் பட்டா எண், புல எண் தெரியாது, பாக்கி சொத்துக்கள் பூர்விக சொத்துகளாக உள்ளன, அவை மாமானாரின் அப்பா

அண்ணாமலை பெயரில் உள்ளது, அதற்கும் பட்டா எண் , புல எண் தெரியாது. அந்த சொத்துகளுக்கு பட்டா எண், புல எண் இருக்கிறது அவற்றை கணினி பதிவிறக்கம் செய்யலாம், மேற்சொன்ன சொத்துக்கள் அனைத்தும் மூக்கப்பஉடையான்பள்ளம் ஊரில் உள்ளது, அந்த ஊர் முதுகுளத்துரில் இருந்து 3 கி.மீ தூரத்தில் உள்ளன. மூக்கப்பஉடையான்பள்ளம் கந்தர்வகோட்டை தாலுக்கா, புதுகோட்டை மாவட்டத்தில் உள்ளது, வீரமுண்டாங்குடிகாட்டில் என் அப்பா பெயரில் 5 ஏக்கர் நிலம் உள்ளது, அதற்கு பட்டா எண், புல எண் தெரியாது. வீரமுண்டாங்குடி காட்டில் உள்ள பூர்விக சொத்தை என் அம்மாவைவிட்டு விவசாயம் பார்க்கிறோம். நான் வீரமுண்டாங்குடி காட்டிற்கு ஒருநாள், இரண்டு நாள் போவேன், வீரமுண்டாங்குடி காட்டிற்கு மூக்கப்பஉடையான்பள்ளத்தில் இருந்து அவ்வாறு போய்வருவேன். என் மனைவி, பிள்ளைகள் நான் மூக்கப்பஉடையான் பள்ளம் ஊரில் குடியிருக்கிறோம், 20 வருடங்களாக அங்கு குடியிருக்கிறோம், என் மனைவி பிறந்த ஊர் மூக்கப்பஉடையான்பள்ளம், எனக்கு திருமணமாகி பத்து, பன்னிரெண்டு வருடங்கள் கழித்து மூக்கப்பஉடையான்பள்ளத்திற்று வந்தேன், எனக்கு மூன்று மகள்கள், ஒருமகன். மூத்த மகளுக்கு 27 வயதாகிறது, என்னுடைய கடைசி மகளுக்கு பதினாறு வயதாகிறது. எனக்கு குழந்தைகள் பிறந்தது எல்லாம் வீரமுண்டாங்குடிகாட்டில்தான். மூக்கப்பஉடையான்பள்ளம் ஊரில் பணம் கொடுத்து நான் கிரயம் வாங்கியது ஒருஏக்கர்தான், என் மகன் பெயரில் வாங்கியிருக்கிறேன், ஒருவருடத்திற்கு முன்பு அவ்வாறு வாங்கினேன். ஒருவருடத்திற்கு முன்பு வரை நான் அசையா சொத்துக்கள் எதையும் கிரயம் வாங்கவில்லை. 7 ¼ ஏக்கருக்கு தென்னம்பிள்ளை, 5 ஏக்கருக்கு கரும்பு விவசாயம், பாக்கி இடத்தில் மழை பெய்தால் விவசாயம், முந்திரிகாடும் இருக்கிறது. 2017 ஆம் ஆண்டில் இருந்து கரும்பு விவசாயம் செய்கிறோம், என் அக்கா பெயரிலும், என் மனைவி பெயரிலும் 2005 ஆம் ஆண்டில் இருந்து கரும்பு விவசாயம் செய்கிறோம். கரும்பு பணம் வங்கி கணக்கிற்கு தான் வரும். எனக்கு புதுநகர் இந்தியன் வங்கியில் கணக்கு இருக்கிறது, என் மனைவிக்கும் அதே வங்கியில்தான் இருக்கிறது. வங்கி கணக்கு எண் எதுவும் ஞாபகமில்லை, வங்கி கணக்கு பாஸ்புத்தகம் என்னிடம் இருக்கிறது, வங்கி கணக்கை பார்த்தால் கரும்பு பணம் வந்திருக்கிறதா என்பதும், வரவு செலவும் தெரியும். எனக்கு விவசாயத்தை தவிர ஜேசிபி இரண்டு வைத்திருக்கிறோம், ஒன்று என் பெயரிலும் மற்றொன்று என் மகன் பெயரிலும் உள்ளது, என் பெயரில் 2005 லும், என் மகன் பெயரில் 2020 ஆம் ஆண்டிலும் வாங்கினோம், என் பெயரில் உள்ள ஜேசிபியின் எண் TN45 AH 9696, என் மகன் பெயரில் உள்ள வாகனத்திற்கு இன்னும் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. என்னுடைய வருமானம் மற்றும் வரவுசெலவை காட்டுவதற்கு நான் கணக்கு வைத்துக்கொள்ளவில்லை. வருமானவரி செலுத்தவில்லை. எனக்கு எந்தவிதமான நிலங்களும் இல்லை எனவும் வருமானமும் இல்லை எனவும் சொன்னால் தவறு. என்னுடைய மாமியார் வீட்டிற்கு முதுகுளத்தில் அரை ஏக்கர் மட்டும்தான் நிலம் இருக்கிறது என்றும் சொன்னால் தவறு. நான் வீரமுண்டாங்குடி காட்டில் குடியிருக்கவில்லை என்றும் 35 வருடங்களுக்கு முன்பே என் மாமியார் வீடு இருக்கும் முதுகுளத்திற்கு வந்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல, என்னுடைய மாமியார் வீடு மூக்கப்பஉடையான்பள்ளம். நான் என்னுடைய வீட்டில்

மூக்கப்பஉடையான்பள்ளத்தில் வைத்து பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்தேன், பிரதிவாதி பணம் கேட்டபோது என்னிடம் என் மகனின் சொத்து 7 ½ ஏக்கரை விற்ற பணம் இருந்தது. விற்றதற்கான கிரய பத்திரம் இருக்கிறது, ஏக்கர் 4 லட்சத்து பத்தாயிரம் என்று விற்றேன், மொத்தமாக எவ்வளவு தொகைக்கு விற்றேன் என்று ஞாபகமில்லை, 30 லட்சத்திற்கு மேல் விற்றேனா என்றால் ஆமாம். பிரதிவாதிகளை தவிர வேறு யாருக்கும் கடன் தரவில்லை, மீதி பணத்தை ஜேசிபி வாங்கினேன், கார் வாங்கினேன், என் மகளுக்கு திருமண செலவு செய்தேன். சொத்தை விற்ற தேதி எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதிக்கு 29.08.2018 ஆம் தேதி கடன் கொடுத்தேன் தமிழ் மாதம் தெரியாது. புரோநோட்டு மூக்கப்பஉடையான் பள்ளத்தில் வைத்து எழுதப்பட்டது, எழுதியவர் பெயர் வைரவேல் அவர் எந்த ஊர்க்காரர் என்று எனக்கு தெரியாது பிரதிவாதி தான் அழைத்து வந்தார், முதல் சாட்சி கையொப்பம் போட்டவர் குருங்குளத்தை சேர்ந்தவர் பிரதிவாதியின் வீட்டிற்கு எதிர்வீட்டுக்காரர். இரண்டாவது சாட்சி கையொப்பம் போட்டவர் ராஜாஅ வர் எந்த ஊர் என்று ஞாபகமில்லை பிரதிவாதிதான் அழைத்து வந்தார். புரோநோட்டை கோவிந்தராஜ் வாங்கி வந்தார். புரோநோட்டு பச்சை பேப்பரில் எழுதினார்களா, வெள்ளை பேப்பரில் எழுதினார்களா என்று ஞாபகமில்லை. புரோநோட்டு எழுதும் போது கோவிந்தராஜ், அவரது மனைவி பெயர் சதானந்தபதி சாட்சிகள் சிங்காரவேலு, ராஜா, வைரவேல் நான் ஆகியோர் இருந்தோம். பிரதிவாதிகள் எனக்கு நேராக தான் கையெழுத்து போட்டார்கள், அதற்கு முன்பு பிரதிவாதிகளின் கையெழுத்தை பார்த்ததில்லை. தாவா கடனுறுதி சீட்டில் கையெழுத்து போட்டதுபோல்தான் எப்பொழுதும் கையெழுத்து போட்டு கடன் வாங்கி செல்வார்கள். எனக்கு படிக்க தெரியாது, நான் அரைகுறையாக தான் படிப்பேன். கடனுறுதி சீட்டில் சதானத்தபதி என்று இருக்கிறது என்றால் அது அவர் போட்டு கொடுத்ததுதான். கிரய பத்திரத்தில் சதானந்தபதி என பெயர் இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு நான்தான் விபரம் சொன்னேன். வழக்கறிஞர் அறிவிப்பில் சதானந்தபதியை பிரதிவாதியின் மகன் என்று சொல்லிதான் அறிவிப்பு கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த சமயத்தில் எனக்கு சதானந்தபதி ஆணா பெண்ணா என்று தெரியாது என்றும் அதனால் கோவிந்தாராஜின் மகன் என்று அறிவிப்பில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல, மனைவி என்று தான் சொல்லியிருக்கிறேன். 29.08.2018 முன்போ, பின்போ பிரதிவாதிகள் என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் யார் என்று எனக்கு தெரியாது என்றும், என்னை யார் என்று பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள கோவிந்தராஜ் என்ற கையொப்பம் 1ஆம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றும் சதானத்தபதி என்பது 2 ஆம் பிரதிவாதியின் கையொப்பம் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கடனுறுதிசீட்டின் அடிப்படையில் பிரதிவாதிகள் என்னிடம் ரூ 12 லட்சம் தொகையோ வேறு தொகையோ கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு முழுவதும் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சாட்சி கையொப்பம் போட்டுள்ள சிங்காரவேலு என்பவர் பிரதிவாதிகளிடம் விரோதமுள்ள நபர் என்றால் சரியல்ல. சாட்சி ராஜா, வைரவேல் யார் என்றே பிரதிவாதிகளுக்கு

தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு வேண்டிய நபரையும் பிரதிவாதிகளுக்கு விரோதமான நபரையும் பயன்படுத்தி கடனுறுதி சீட்டை மோசடியாக தயாரித்திருக்கிறேன் என்றால் தவறு. பிரதிவாதிகளுக்கு குருங்குளம் விலாசத்திற்கு நான் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும் பிரதிவாதிகள் அறிவிப்பு எதுவும் பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு விரோதமான சிங்காரவேலு மூலமாக வேறு யாரையோ கையெழுத்து போடசொல்லி அறிவிப்பை பெற செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 2016 ஆம் ஆண்டில் இருந்து பிரதிவாதிகள் கிராமத்தில் வசிக்கவில்லை என்றம் திருவையாறு பக்கம் உள்ள பள்ளிக்கிராகாரத்தில் வசிக்கிறார்கள் என்றால் சரியல்ல. ஒருதலைபட்சமான உத்தரவை பெறலாம் என்பதற்காக தவறான விலாசத்தை காட்டி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும் வழக்கும் தாக்கல் செய்தும் உள்ளேன் என்றால் சரியல்ல. கிரய பத்திரத்தை எடுத்து பார்த்தபோதுதான் சதானந்தபதி 1 ஆம் பிரதிவாதியின் மனைவி என தெரிந்து கொண்டு வழக்கு போட்டிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் கூலிகள் என்று தெரிந்தும் அவர்களுக்கு விலைமதிப்பு உள்ள சொத்துக்கள் இல்லை என தெரிந்தும் பிரதிவாதிகளின் 2 ½ ஏக்கர் சொத்தை அபகரிப்பதற்காக பக்குமணி என்பவரது பினாமியாக செயல்படுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி யாரிடம் வாங்கிய கடனை தீர்ப்பதற்காக என்னிடம் கடன் வாங்கினார் என்று பெயரை என்னிடம் சொல்லவில்லை. எவ்வளவு கடன் இருக்கிறதும் என்று சொல்லவில்லை 12 லட்சம் வேண்டும் என்றுதான் சொன்னார். கடனுறுதி சீட்டில் என்ன காரணம் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு ஞாபகமில்லை, நான்கு மாதத்தில் திருப்பி செலுத்துவதாக கடனுறுதி சீட்டில் எழுதப்படவில்லை வாய்மொழியாக சொன்னதுதான். ரூ 12 லட்சம் கடன் கொடுப்பதற்கு எனக்கு வசதி இல்லை என்றும், 12 லட்சரூபாய் கடன் பெற பிரதிவாதிகளுக்கு தேவையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் ரூ 12 லட்சம் கடன் வாங்கவில்லை, கடனுறுதி சீட்டு எழுதிதரவில்லை என்றும், அதனால் நான் கேட்ட பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் கையெழுத்து போட்டதுபோல் கடனுறுதி சீட்டு மோசடியாக தயாரித்தேன் என்றால் சரியல்ல. எனக்கு நிலங்கள் எதுவும் இல்லை என்பதால் தான் பட்டா எண், புல எண் ஞாபகமில்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல, அதற்கான ஆவணங்கள் இருக்கின்றன.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.